# இரண்டாம் இடைப்பருவ பொதுத் தேர்வு - 2022

R

## ஒன்பதாம் வகுப்பு

பதிவு எண் :

## தமிழ்

நேரம் : 3.00 மணி

மதிப்பெண்கள் : 100

பகுதி - I (மதிப்பெண்கள் 15)

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 15 x 1 = 15

1. பல்லவர் காலச் சிற்பக்கலைக்குச் சிறந்த சான்று ______.
   அ) மாமல்லபுரம் ஆ) பிள்ளையார்பட்டி
   இ) வடுகப்பட்டு ஈ) தாடிக்கொம்பு
2. பொதுவர்கள் பொலிவரப் போர் அடித்திடும் நிலப்பகுதி ______.
   அ) குறிஞ்சி ஆ) முல்லை இ) மருதம் ஈ) நெய்தல்
3. அதிரப் புகுதக் கனாக் கண்டது யார்?
   அ) தோழி ஆ) கண்ணன் இ) ஆண்டாள் ஈ) தாய்
4. மரவேர் என்பது ______.
   அ) இயல்பு ஆ) திரிதல் இ) தோன்றல் ஈ) கெடுதல்
5. திருநாதர் குன்றில் உள்ள புடைப்புச் சிற்பங்கள் ______.
   அ) விலங்கு ஆ) தீர்த்தங்கரர் இ) தெய்வ
6. இரும்பு என்பது ______ தொடர் குற்றியலுகரம்.
   அ) வன் ஆ) மென் இ) இடை ஈ) உயிர்
7. உலகத்துக்கு அச்சாணி யார்?
   அ) மருத்துவர் ஆ) உழவர் இ) ஓட்டுநர் ஈ) வணிகர்
8. டெல்லி சலோ என்ற முழக்கத்தை எழுப்பியவர்
   அ) காந்தி ஆ) நேதாஜி இ) நேரு ஈ) திலகர்
9. இந்திய தேசிய இராணுவம் ______ தலைமையில் உருவானது.
   அ) நேதாஜி ஆ) மோகன் சிங் இ) திலகர் ஈ) கரியப்பா
10. இளங்கமுகு என்பதன் இலக்கணக்குறிப்பு
    அ) வினைத்தொகை ஆ) பண்புத்தொகை
    இ) அன்மொழித்தொகை ஈ) வேற்றுமைத்தொகை
11. மஞ்சள் பூசினாள் என்பது ______ ஆகுபெயர்.
    அ) சினை ஆ) பண்பு இ) இட ஈ) கருவி

பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

அருவிய முருகியம் ஆர்ப்பப் பைங்கிளி
பருகிய தமிழிசை பாடப் பொன்மயில்
அருகிய சிறைவிரித் தாடப் பூஞ்சினை
மருவிய குரக்கினம் மருண்டு நோக்குமால்

12. இப்பாடல் எந்நூலில் இடம் பெற்றுள்ளது?
    அ) நாச்சியார் திருமொழி ஆ) இராவணகாவியம் இ) மூதுரை ஈ) ஆசாரக் கோவை

13. இப்பாடலின் ஆசிரியர் யார்?

அ) புலவர் குழந்தை ஆ) ஆண்டாள் இ) சுந்தரர் ஈ) அப்பர்

14. முருகியம் என்பது ______ பறை.

அ) முல்லை ஆ) மருதம் இ) குறிஞ்சி ஈ) நெய்தல்

15. பைங்கிளி என்பதன் இலக்கணக்குறிப்பு

அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை

இ) வேற்றுமைத் தொகை ஈ) உவமைத் தொகை

பகுதி - II (மதிப்பெண்கள் 18)

பிரிவு - 1

**எவையேனும் நான்கனுக்கு மட்டும் குறுகிய விடையளி.** 4 x 2 = 8

16. இருக்கும் வரை உள்ள நோய் எது?

17. விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க.

அ) பல்லவர் காலச் சிற்பங்கள் கலை நயத்துடன் உள்ளன.

ஆ)தமிழின் தொன்மையான இலக்கண நூல் தொல்காப்பியம்.

18. நடுகல் என்றால் என்ன?

19. கண்ணன் புகுந்த பந்தல் எவ்வாறு இருந்தது?

20. இந்திய தேசிய இராணுவத்தில் குறிப்பிடத்தக்க வீரர்கள் யாவர்?

21. 'தூண்' என முடியும் குறளை எழுதுக.

பிரிவு - 2

**எவையேனும் ஐந்தனுக்கு மட்டும் குறுகிய விடையளி** 5 x 2 = 10

22. இடிகுரல், பெருங்கடல் - இலக்கணக் குறிப்பு தருக.

23. பகுபத உறுப்பிலக்கணம் தருக - தொட்டு

24. மரபுத்தொடர் கொண்டு தொடரமைக்க : எட்டாக்கனி

25. காலவாகு பெயரைச் சான்றுடன் விளக்குக.

26. கலைச்சொல் தருக : அ) Treasury ஆ) Cave Temple

27. கவிதை படைக்க : மூடநம்பிக்கை

28. மரபுப்பிழை நீக்குக : அ) கூரை போட்டனர் ஆ) காற்று அடித்தது

பகுதி - III (மதிப்பெண்கள்- 18)

பிரிவு - 1

**இரண்டு வினாக்களுக்கும் மட்டும் சுருக்கமான விடையளிக்க.** 2 x 3 = 6

29. ஆகுபெயர்கள் ஐந்தினை எழுதுக.

30. குறிப்பு வரைக : டோக்கியோ கேடட்ஸ்

31. 'மகால் எடுத்த முந்நீர் போல' - இடஞ்சுட்டி பொருள் விளக்குக.

பிரிவு - 2

32. மதுரைக்காஞ்சி - பெயர்க்காரணம் குறிப்பிடுக. 2 x 3 = 6

33. உங்கள் ஊரில் உற்பத்தியாகும் பொருட்களையும் சந்தையில் காணும் பொருள்களையும் ஒப்பிட்டு எழுதுக.

34. 'சொல் அரும்' எனத் தொடங்கும் சீவக சிந்தாமணி பாடலை அடி மாறாமல் எழுதுக.

2x3=6

பிரிவு - 3

35. கைபிடி, கைப்பிடி சொற்களின் பொருள் வேறுபாடுகளையும் அவற்றின் புணர்ச்சி வகைகளையும் எழுதுக.

36. குற்றியலுகர வகைகள் யாவை?

37. பண்பாகு பெயர், தொழிலாகு பெயர் - விளக்குக.

பகுதி - IV (மதிப்பெண்கள் - 25 )

5x5=25

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

38. அ) ஏமாங்கத நாட்டு வளம் குறித்த வருணனைகளை நும் ஊரின் வளங்களோடு ஒப்பிடுக.

(அல்லது)

ஆ) இராவண காவியத்தில் உங்களை ஈர்த்த இயற்கை எழில் காட்சிகளை விவரிக்க.

39. அ) 'எனது பயணம்' என்னும் தலைப்பில் உங்களது அனுபவங்களை வருணித்து எழுதுக.

(அல்லது)

ஆ) எங்கள் ஊர்ச் சந்தை என்னும் தலைப்பில் நாளிதழ்ச் செய்தி ஒன்றை எழுதுக.

40. அ) பனியிலும், மலையிலும் எல்லையைக் காக்கும் இந்திய வீரர்களின் பணியைப் பாராட்டி உங்கள் பள்ளிக் கையெழுத்து இதழுக்கு ஒரு துணுக்குச் செய்தி எழுதுக.

(அல்லது)

ஆ) மொழிபெயர்க்க :

1. Strengthen the body
2. Love your food
3. Thinking is great
4. Walk like a bull
5. Union is strength
6. Practice what you have learnt. - (Putiya Athichoti by Bharathiyar)

41. அ) மரபுத் தொடர்களைக் கொண்டு தொடர் அமைக்க.

1. எட்டாக்கனி
2. ஆகாயத்தாமரை
3. கிணற்றுத்தவளை
4. எடுப்பார் கைப்பிள்ளை
5. உடும்புப்பிடி

(அல்லது)

ஆ) காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.

